Trade Union Rights to Teachers.

* 35 *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any resolution has been sent to the Government from Tamil Nadu Elementary School Teachers' Federation, requesting that teachers should be given trade union rights; and

(*b*) if so, the action taken thereon?

ஆசிரியர்களுக்குத் தொழிற்சங்க உரிமை

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) ஆசிரியர்களுக்கு தொழிற் சங்க உரிமை வழங்க வேண்டுமென தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியிடமிருந்து அரசுக்கு தீர்மானம் அனுப்பப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 20—1—1973-ல் கோவையில் நடைபெற்ற தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மாநில வெள்ளிவிழா மாநாட்டில் ஆசிரியர்களுக்குத் தொழிற்சங்க உரிமை வழங்க வேண்டுமென நடுவண் அரசினைக் கேட்டுக் கோரிக்கை விடப்பட்டது.

(இ) மேற்படி கோரிக்கை நடுவண் அரசைக்கேட்டு விடப்பட்டுள்ளதால், இதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கும் அவசியம் ஏற்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தொழிற் சங்க உரிமை என்று குறிப்பிட்டார்கள். என்ன விதமான உரிமை அவர்கள் கேட்கிறார்கள் என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் தெரியவில்லை. ஆனால் தொழிற்சங்க உறுப்பினர் ஆவதற்கான உரிமை வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது நடுவண் அரசுக்குத் தெரிவிக்கப்படுமேயானால், ஏற்கெனவே நம்முடைய அரசு அவர்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்று சொல்கின்றபோது, இதை மத்திய அரசுக்கு வேறு விதமாகப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தின் முடிவானாலும் மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்வதானாலும், இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்தி வருமே தவிர, வேறு கருத்து சொல்லப்படாது. ஏனென்றால் பள்ளிகள் எல்லாம் தொழிற்சாலைகளாகவும், ஆசிரியர்கள் எல்லாம் தொழிலாளர்களாகவும் மாற்றப்படும் நிலைமை எந்த வகையிலும் நல்லது ஆகாது. மத்திய அரசாங்கம் எங்களைக் கருத்து கேட்கவில்லை. கேட்டாலும் எங்களைப் பொறுத்தவரையில், இந்தக் கருத்தைத்தான் சொல்வோம். இது ஒரு சர்வீஸ், தொண்டு, பணி என்ற அடிப்படையில் நடைபெற வேண்டியது. பிறகு பல பிரச்சினைகள் வரும். ஏழு மணி நேரம், எட்டு மணி நேரம், 52 ஞாயிற்றுக் கிழமைகள், 15 நாட்கள் விடுமுறை என்று எல்லாம் வரும். தொழிலாளர், தொழிற்சாலை, உற்பத்தி, தொழிலாளர்களுக்கு போனஸ், இப்படி பல உரிமை எல்லாம் வருகிறது. ஆசிரியர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கு பல வழிகள் இருக்கின்றன. தனியாக அவர்கள் தங்களுடைய சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழி வகைகள் இருக்கின்றன. தொழிற் சங்க உரிமை பெற்றுத்தான் அவைகளைப் பெற்றாக வேண்டும் என்பதில்லை. தனியாகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள், அந்த வகையில் செய்யலாமே தவிர, தொழிற் சங்கச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவது அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தொழிற்சாலைகளில் பணியாற்றுகிறவர்கள் மட்டும்தான் தொழில் செய்கிறார்கள் என்று பொருளா? அவர்கள் மட்டும்தான் தொழிலாளர்கள் என்று கருதப்படுகிறார்களா? ஆசிரியர்களுடைய தொழில் ஒரு தொழில் இல்லையா? எந்தத் தொழிலை ஆற்றுபவர்களுக்கும் தொழிற் சங்க உரிமை இருக்கிறதென்று சொல்லும்போது, ஆசிரியர்களுக்கும் அந்த உரிமை கொடுக்கப்படுமா? ஆசிரியர்கள் தொழிலையும் ஒரு தொழிலாகக் கருதி தொழிற் சங்க உரிமையை அவர்களுக்குக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப் பார்ப்போமானால், அரசாங்கப் பணியில் உள்ளவர்களைப் பார்த்து விட்டுத்தான், ஆசிரியர்கள் தொழிலுக்கு வரவேண்டியிருக்கும். இதைத் தொழிற் சங்கமாகக் கருதினால், தொழிலாளர்கள், "ஆசிரியர்கள் எல்லாம் 4½ மணி நேரம், 5 மணி நேரம் தான் வேலை செய்கிறார்கள்; நாங்களும் அப்படித்தான் வேலை செய்வோம்" என்று சொல்லுவார்கள். ஆசிரியர்கள் ஒரு வருடத்தில், 365 நாட்களில் 200 நாட்கள் தான் வேலை செய்கிறார்கள்; நாங்களும் அப்படித் தான் வேலை செய்வோம் என்று இவர்களைப் பார்த்து அவர்கள் கேட்பார்கள்.

1974 சனவரி 23]

அந்த வேலே வேறு; இந்த வேலே வேறு. தொழிலாளர்களோடு ஆசிரியர்களை ஒப்பிடுவது சரியல்ல என்பதுதான் என்னுடைய எண்ணம். தொழிலாளர்களுடைய பணி முறைகள் வேறு, ஆசிரியர்களுடைய பணிமுறைகள் வேறு. ஆசிரியர்கள், அவர்களுடைய உரிமைகளை வசதிகளைத் தனியாகக் கோரலாம். அவர்கள் அவற்றைத் தனியாகப் பெற முயற்சி செய்யலாம் என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, is not the right to form associations guaranteed by the Constitution and if so, how could the Central Government deprive these persons of the right to form Unions, when the Constitution has not been amended to that effect?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி இந்திய அரசாங்கம் என்ன கருதுகிறதென்று தெரியவில்லை. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று நாம் கூறுவதற்கில்லை. சாதாரணமாக ஆசிரியர் சங்கங்கள் என்று அமைத்துக் கொள்கிறார்கள். தொழிற் சங்கங்கள் என்று அமைக்க மத்திய அரசு அனுமதிக்கிறதா என்று குறிப்புகள் இல்லை.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, ஆசிரியர்கள் பணி தொழிலா அல்லது தொண்டா என்று விளக்குவதற்கு அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்குமா? அதுபற்றி அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறதென்று அறிய விரும்புகிறேன். மேலும் கூட்டணி, முன்னணி என்ற நிலை ஆசிரியர்கள் மத்தியில் இருக்கின்றது. அதற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது தொழிலா அல்லது தொண்டா என்று இனிமேல் ஆராய்ந்து, ஒரு முடிவு கட்ட வேண்டிய நிலைக்கு வர வேண்டிய அவசியமில்லை. தொழிலுக்கு என்று இலக்கணம் கொடுத்தால், அது தொழிலாகவும் இருக்கலாம்; தொண்டாகவும் இருக்கலாம். ஆக எது ஒன்றும் தொழிலாகவோ தொண்டாகவோ மட்டும் இருக்க முடியாது. இவற்றைப் பொறுத்த வரையில் 'எஜுகேஷனல் சர்வீஸ்', 'மெடிகல் சர்வீஸ்' என்று அழைக்கிறோம். தொழிலைத் தொண்டுள்ளத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றாகக் கருதுகிறோம். சம்பளம் போன்றவைகளை வழங்கும் போது, தொண்டு செய்பவர்கள் சம்பளம் வாங்கலாமா என்ற கேள்வி வரும். அந்த நிலைமையில் அது தொழிலாகக் கருதப்படுகிறது. அந்தத் துறையின் தனித் தன்மைக்கு இணங்க இவைகளைக் கவனிக்க வேண்டும்.

[1974 சனவரி 23

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு விதமாக இருக்கிறது. 'பிசிகல் ஓர்க்'; 'மென்டல் ஓர்க்' என்று இருக்கிறது. கை, கால்களால் வேலை செய்பவர்கள் தொழிலாளர்கள். மூளையால் வேலை செய்பவர்கள் ஆசிரியர்கள். இரண்டையும் ஒன்றாக்கலாமா ?

புலவர் ஓ. அறிவுடை நம்பி : தலைவரவர்களே, ஆசிரியர்களுடைய பணியை தொண்டு என்கின்ற அளவில் நம்முடைய அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே அவர்களிடமிருந்து தொழில் வரி வாங்குவதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆசிரியர்கள் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கருதினால் அது எங்கே கொண்டுபோய்விடுமோ என்று எண்ணுகின்ற அளவுக்கு புலவர் அறிவுடைநம்பி அவர்களுடைய கேள்வி இடம் தருவதாக அமைகிறது. அது தொழிலா, தொண்டா என்பதுபற்றி மாண்புமிகு தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். பெரும்பகுதி வேலை செய்பவர்களுக்கு கை, கால்கள் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு மூளை வேலை செய்யும். அப்படியானால், ஆசிரியர்களுக்கு கை, காலே வேலை செய்யாதா என்றதொரு கேள்வியைக் கேட்க முடியாது. ஆக தொழிலா, தொண்டா என்று கேட்கும்போது, ஆசிரியர் பணி பொதுவாகத் தொண்டின் அடிப்படையில் வரும் சர்விஸாகக் கருதப்படும்.

THIRU S. T. ADITYAN : Mr. Chairman, Sir, will the Hon. Minister be pleased to say what exactly the present demand is? Is it a demand to form associations or to form Trade Unions under the Trade Unions Act?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆசிரியர்களுக்குத் தொழிற் சங்க உரிமை கொடுக்க வேண்டுமென்று மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது என்ற அளவுக்குக் கேட்டிருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்கள் இரண்டு வகையான தொழிலாளர்கள் இருக்கிறார்களென்றும், கருத்தால் உழைப்பவர்கள், கரத்தால் உழைப்பவர்கள் என்றும் குறிப்பிட்டார்கள். கரத்தால் உழைப்பவர்களும் மூளையோடு பணியாற்றுகிறார்கள் ; ஆசிரியர்களுடைய மூளையோடு, அவர்களுடைய உழைப்பும் அதில் இருக்கிறது. இவர்கள் இரண்டு பேரும் தொழில் செய்பவர்களாகக் கருதப்படுகிறார்கள் என்பதால், ஆசிரியர்களுக்கும் தொழிற் சங்க உரிமை வழங்கப்படுமா ? அப்படி வழங்குவதால் எவ்விதக் குற்றமோ

1974 சனவரி 23]

வேறு பயங்கரமான பாதிப்போ வாராது. எனவே ஆசிரியர்களுக்கான உரிமைகள் வழங்கப்படுவது அரசு மீண்டும் பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். தொழிற் சங்க உரிமைகளை வழங்கும்போது அதற்கான கண்ணோட்டம், சட்ட திட்டங்கள், விதி முறைகள், மற்றவைகள் மாறுபடுகின்றன. ஆசிரியர்களுக்கான சட்ட திட்டங்கள் மாறுபடுகின்றன. ஆகவே இப்போது ஆசிரியர்களுக்கு இருக்கின்ற அதே நிலைதான் இருக்க வேண்டுமென்று அரசினுடைய கருத்தாகும்.

Evening Colleges.

* 36. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government are aware that a large number of persons seeking admission into the evening colleges are denied admission due to paucity of seats in Madras City and in the districts; and

(b) the steps taken thereon?

மாலை நேரக் கல்லூரிகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலும், மாவட்டங்களிலும் உள்ள மாலை நேரக் கல்லூரி களில் சேர விழையும் மாணவர்களில் பலருக்கு இடப்பற்றுக்குறை காரணமாக அனுமதி மறுக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா?

(இ) இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இதுபற்றி அரசுக்கு யாதொரு புகாரும் வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சென்னையிலே பெண்கள் மாலை நேரக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.